EMPLOYMENT ONTARIO
Ontario's employment & training network

Ontario

**கூட்டுறவு டிப்ளோமா அப்ரெண்டிஸ்ஷிப் திட்டம்**

கூட்டுறவு டிப்ளோமா அப்ரெண்டிஸ்ஷிப் திட்டம் (Co-op Diploma Apprenticeship Program) ஒரு கல்லூரி டிப்ளோமா திட்டத்தையும் அப்ரெண்டிஸ்ஷிப் பயிற்சியையும் இணைத்து ஒரு தகுதிச்சான்றிதழ் (Certificate of Qualification) பெற வழிநடத்தும்.

கல்லூரியினூடாக, இத்திட்டத்தில் பங்குகொள்வோர், டிப்ளோமா பாடத்தையும், சம்பந்தப்பட்ட தொழிற் தேர்ச்சியில் பாடசாலை அப்ரெண்டிஸ்ஷிப் (வேலை பழகும் நிலை) பயிற்சியையும் தொடரலாம். அத்தோடு இதில் பங்குகொள்வோரை, தங்கள் சொந்த வியாபாரம் ஒன்றை மேற்பார்வை செய்யவும் கொண்டு நடத்தவும் தயார்ப்படுத்துவதற்காக வியாபார மற்றும் வர்த்தக பாடங்களையும் இத்திட்டம் உள்ளடக்கும். மேலும் இத்திட்டத்தில் பங்குகொள்வோர் அப்ரெண்ஸ்டிஷிப் பயிற்சித் தேவைகளை முடிப்பதற்கு ஏதுவான அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை வேலையில் பயிற்சியையும் பெற்றுக்கொள்வர்.

**யார் பங்குகொள்ள முடியும்?**

கூட்டுறவு டிப்ளோமா அப்ரெண்டிஸ்ஷிப் திட்டத்தில் பதிவு செய்ய விரும்புவோர், கல்லூரி டிப்ளோமா திட்டம், மற்றும் அப்ரெண்டிஸ்ஷிப் பயிற்சி ஆகிய இரண்டுக்குமான தகுதித் தராதரங்களை (eligibility criteria) எட்டியிருக்க வேண்டும்.

**கூட்டுறவு டிப்ளோமா அப்ரெண்டிஸ்ஷிப் திட்டத்தை நான் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?**

பங்கெடுக்கும் கல்லூரிகள் இந்தக் கூட்டுறவு டிப்ளோமாத் திட்டத்தை தங்களுடைய கல்லூரி தகவல் சிற்றேட்டிலும் தங்களுடைய வலைப்பக்கத்திலும் (website) விளம்பரம் செய்வார்கள். ஆர்வமுள்ளவர்கள் கல்லூரியினூடாக இத்திட்டத்திற்கு விண்ணப்பம் செய்வார்கள். உள்ளூரில் வழங்கப்படுபவற்றை தெரிந்துகொள்ள அமைச்சுடனும் (Ministry) தொடர்புகொள்ளலாம்.

**மேலதிக தகவல்களுக்கு:**

1-800-387-5656
(416) 326-5656 (Toronto)

www.ontario.ca/employmentontario

ISBN 1-4249-2457-X